
July 2019

# Coastal Watch

கடலோரப் பார்வை



Voice of Vulnerables...

Coastal Watch
Monthly Coastal update from ICT
Vol. I Issue 1 July 2019

Welcome to Coastal Watch!

This is a Monthly Magazine produced with the reflection of Coastal Community on their life experience. It is released as part of the DHAN Foundation - Earth Journalism Network Project- Internews Project titled “Voice of Vulnerable”.. It is proposed to release 9 magazines in the one year from April 2019 to March 2020. This is the first edition of the Magazine titled “Coastal Watch”.

The articles in this magazine are not written by Journalist or Expert in the Media Field. The Articles are written by Community Journalism Volunteers trained by DHAN Foundation to write articles and promote community journalism in the coastal area.

This Edition 1 of the Coastal Watch carries around 7 articles, which talks about the Experience and Life Style of Salt Plant workers, Life Style of Fishermen, Experience of coastal farmer after Gaja Cyclone, an experience sharing of poor fisher women who is not willing to involve her daughter for her livelihood, The view of a coastal girl on Coastal Women Empowerment. This edition also carries articles on village level festival which reflect the culture of the coastal community and also the contribution of technology for the development of the coastal poor.

Thanks in advance for your support!

Keep Read and Reflect….

Regards

Editorial Team

Coastal Watch

## உள்ளடக்கம்

1. சாப்பாட்டிற்கு உப்பு போடுகிறோம்,
எங்களுக்கு உப்பு தான் சாப்பாடு போடுது.. 1

2. கடந்த நாற்பது வருசமா என் தூக்கம் கடலுக்குள் தான்!... 3

3. அடித்த கை அணைக்கும் என்ற நம்பிக்கையில்... 6

4. அடுத்த தலைமுறையை எனது தொழிலுக்கு
விடமாட்டேன்... 9

5. பாரதி உனது கனவு மெய்படுமா? 10

6. எங்க ஊரு திருவிழா! 12

7. சமூகத்தின் வளர்ச்சியில் தகவல் தொடர்பு
தொழில்நுட்பத்தின் பங்கு 15

DHAN Foundation
1A, Vaidyanathapuram East
Kennet Cross Road
Madurai 625 016. Tamil Nadu, INDIA
Tel.: +91 452 2302500; Fax: 2602247
Email: dhanfoundation@dhan.org



# சாப்பாட்டிற்கு உப்பு போடுகிறோம், எங்களுக்கு உப்பு தான் சாப்பாடு போடுது...

கௌதம் *

எந்தவொரு சமூகமும் செழிக்க, வாழ்வாதார வழிமுறைகள் செழிக்க வேண்டும். இயற்கை பேரிடர்கள் வாழ்வாதாரத்தை பாதிக்கின்றன, வாழ்வாதார பாதிப்பு வருமானத்தை பாதிக்கிறது, வருமானம்; சமூகத்தல் வாங்கும் திறன், நிதி சூழல் அமைப்பு மற்றும் ஒட்டுமொத்த சமூகத்தில் உயிர்வாழ்வதை பாதிக்கிறது. இயற்கை போரிடரால் எப்படி ஓர் சமூகத்தின் வாழ்வாதாரம் பாதிக்கிறது என்பதை பார்க்கலாம். அவ்வாறு பாதிக்கப்பட்ட ஒரு சமூகம் நாகை மாவட்டம், வேதார்னியத்தின் உப்பள தொழிலாளர்கள் சமூகம். இந்த அமைப்பு உப்பள உரிமையாளர்கள் மற்றும் தினசரி கூலி தொழிலாளர்களை உள்ளடக்கியது. காலநிலை மாற்றமும், இயற்கை பேரிடரும் இந்த இரு சமூகங்களின் வாழ்வாதாரத்தையும் பாதித்துள்ளது.

கஜா யானையின் பெயர் கொண்ட கோர புயல், காட்டு யானையை போல் கோரதாண்டவம் ஆடிச்சென்றது. கட்டிடங்களின் மேற்கூரைகளை மட்டுமல்ல, மரங்களையும் வேரோடு சாய்த்தது. கஜா புயல் உப்பள தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தையும் விட்டுவைக்கவில்லை.

வேதாரண்யம் ஒரு காலத்தில் கர்நாடகா, ஆந்திரா, மகாராஷ்டிரா மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களுக்கு உப்பு ஏற்றுமதியாளராக இருந்தது. மிக சமீபத்திய பேரழிவு, கஜா சூறாவளிக்குப் பிறகு, அதன் வழங்கல் பாதியாக குறைக்கப்பட்டுள்ளதாக அப்பகுதியில் உள்ள தயாரிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

முன்னால் எம்.எல்.ஏ.வான என்.வி.காமராஜ் இது பற்றி கூறுகையில்; நான் 50 ஏக்கர் நிலத்தை வைத்திருக்கிறேன், சுமார் 200 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். ''எங்கள் ஏற்றுமதியைப் பற்றி நாங்கள் பெருமிதம் அடைந்தோம், இது பல மாநிலங்களுக்கு உப்பு வழங்கிய பூமி. தற்போது, நம் சொந்த மாநிலத்திற்கு போதுமான

* கௌதம், புதுப்பள்ளி



உப்பு வழங்க முடியாததால், குஜராத்திலிருந்து உப்பு இறக்குமதி செய்யும் நிலையில் உள்ளோம். முன்னதாக, நான் ஒவ்வொரு டன்னிற்கும் ரூ.1,000 சம்பாதித்தேன், ஆனால் இப்போது அது ரூ.500யாக குறைந்துவிட்டது,'' என்று கூறினார்.

உப்பள தொழிலாளர்களில்; ஒருவரான ஆர்.மாரிமுத்து (51), கஜாவுக்குப் பிறகு ஒவ்வொரு தொழிலாளிக்கும் மாநில அரசு ரூ.10,000 கொடுத்தது என்றார். அது வீட்டு அடிப்படை பொருட்கள் வாங்குவதற்கு மட்டுமே போதுமானதாக இருந்தது. சாப்பாட்டிற்கு உப்பு போடுகிறோம், எங்களுக்கு உப்பு தான் சாப்பாடு போடுது...கஜா சூறாவளி நம் முன்னோர்களால் விதைக்கப்பட்ட மரங்களை அழித்துவிட்டது, உப்பளங்களை உருதேறியாமல் செய்துவிட்டது, எங்கள் வாழ்க்கையை திரும்பப் பெற, களத்தில் 4-5 ஆண்டுகள் கடின உழைப்பு கூட போதாது என்கிறார். மாரிமுத்துக்கு ஐந்து மகள்கள் உள்ளனர், இவரது குடும்பத்தில் இவர் மட்டுமே சம்பாதிக்கும் நபராக உள்ளார்.

மற்றொரு தொழிலாளி, மோட்டாண்டிதோப்பு கிராமத்தைச் சேர்ந்த என்.வீரையன் (35) இதுபற்றி கூறுகையில், கஜா புயலால் எனது வேலைவாய்ப்பு பாதித்துள்ளது, அதனால் எனது வீட்டில் திருமணங்கள் ரத்து செய்யப்பட்டன, அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய எங்களுக்கு நிதி போதுமானதாக இல்லை'' என்றார்.

மாநிலத்தின் கஜா சூறாவளி புனரமைப்பு, புனர்வாழ்வு மற்றும் புத்துணர்ச்சி திட்டத்தின் உதவி ஆணையர் செல்வி பேபி இதுபற்றி கூறுகையில் ''நாங்கள் பணத்தை சமூகத்திற்கு கொடுத்தால், அவர்கள் அதை விரைவாக செலவிடுவார்கள். தங்கள் வீடுகளை மீண்டும் கட்டியெழுப்ப அவர்கள் அதைப் பயன்படுத்த தவறிவிடுவார்கள் எனவே, இழந்த வடுடகளின் கட்டுமானத்தின் பொறுப்பை நாங்கள் எடுத்துள்ளோம். மேலும் அவர் கூறுகையில் நாங்கள் திட்டமிட்டுள்ள நீண்ட கால திட்டங்கள் கடற்புறு சமுதாயத்தில் சாதகமான விளைவை ஏற்படுத்தும் என்பதில் எவ்வித அய்யமுமில்லை.

# கடந்த நாற்பது வருசமா என் தூக்கம் கடலுக்குள் தான்!...

முத்து*

''இயற்கை சீற்றத்தின் மத்தியிலே
மனச் சீற்றத்தை மறந்து
மீன் பிடிக்க சென்றோம்
கடலுக்கு என் நாட்டிற்கும் வீட்டிற்கும் ஏற்றம் காண!''

ஆயிரம் ஆயிரம் வரலாற்றுச் சுவடுகளை தன்னகத்தே கொண்ட கடல் அன்னையை துணையாகவும், தங்கள் வாழ்வாதாரமாகவும் கொண்டு வாழ்க்கையை நடத்துபவர்கள்தான் இந்த மீனவர்கள். முதல் உயிரினம் கடலில் பிறந்ததாலோ என்னவோ என்னும் நம் உடம்பில் 7.2 லிட்டர் உப்பு நீர் ஓடுகிறது. தங்கள் பணியில் நொடிக்கு நொடி மரணத்தை எதிர்நோக்கி உப்பு நீரிலேயே வாழ்பவர்கள் மீனவ சமுதாயத்தை சார்ந்த மக்கள். வெளியில் இருந்து பார்த்தால் இவர்களின் வாழ்க்கை எளிதானது போல தெரியும், ஆனால் அவர்களின் வாழ்க்கையானது நிலையற்ற ஒன்றாக உள்ளது. ஆண்கள் வாழ்க்கையின் பாதி நாட்களை கடலிலே கழிக்கிறார்கள். பெண்கள் பாதி நாட்களை கரையில் காத்திருந்தே கழிக்கிறார்கள். உப்பு காற்றை சுவாசிப்பதால் அவர்களின் வாழ்க்கையை ஈரம் நிறைந்தது. ஒரு மீனவர்களின் வாழ்க்கை ஓட்டத்தை பற்றி அறிய கடலளவு போதாது. இதோ ஒரு மீனவரின் ஓலம்.



கடல்கரையில் பிறந்ததால் என் பெயர் முத்து, நான் விழுந்தமாவடி மீனவர்காலனில இருக்கேன். என் முதல் குடும்பம் கடல்தான். என்னுடைய குடும்பத்தின் வாழ்வாதாரம் மீன்பிடித்தல். வலைபோல்

* முத்து, விழுந்தமாவடி, நாகை மாவட்டம்



வாழ்வில் ஆயிரம் சிக்கல்கள் இருந்தாலும் மூன்று தலைமுறையா இந்த தொழில செஞ்சிட்டு இருக்கோம். கடந்த நாற்பது வருசமா என் பாதி நாள் தூக்கம் கடலுக்குள் தான். ஒரு சில நாள் கை நிறைய மீனோடும், சில நாள் கண் நிறைய கண்ணீரோடும் வருவதுண்டு, எங்களுடைய மீன் பிடிக்கிற முறை பாத்திங்கனா சீசனுக்கு சீசன் மாறிகிட்டே இருக்கும்.

எத்தனை பேர் கடலை பார்த்திருக்கிறார்கள்? எத்தனை பேர் கடலில் கால் நனைத்திருக்கிறார்கள்? கடலோடு வாழ்கின்ற மீனவனுக்குதான் அதன் வாசனை இல்லாமல் தூக்கம் வருவதில்லை. கடலுக்கு போயிட்டு ஒரே நாள்ளையும் திரும்புவோம், ஒரு வாரமும் ஆகலாம். ஒவ்வொரு சீசனிலும் ஒவ்வொரு அனுபவம் கிடைக்கும். இந்த சீசன் மக்கினு ஒரு மீன் இருக்கு அது அதிகம் கிடைக்கம் சீசன், அந்த மீன் கடல்ல ஒரு பத்து கிமீ தூரத்திலேயே கிடைக்கும். சில மீன்கள் பிடிக்க நடுக்கடல் வரை போகனும். மீன் கிடச்சா புடிச்சிட்டு ஒரு நாள்ளையே திரும்பி வந்துடுவோம், போகும்போது சாப்பாடு ஒரு நாளைக்கு எடுத்துட்டு போவோம், இரண்டு முணு நாள் தங்குற மாதிரி இருந்து அங்கேயே மீன் புடிச்சி சமைச்சு சாப்பிடுவோம். தத்தித்தாவும் அலைகளில் தல்லாடிக்கொண்டிருக்கும் படகில் நடுக்கடலில் சமைத்து சாப்பிடும் அனுபவம் மீனவனைத் தவிர யாருக்கும் கிடைக்காத வரம்.

துடுப்பு போட்டு கை வலிக்கும் நேரங்களில் வாய்க்கு வருவதொல்லாம் பாட்டாக்கி பாடுவோம். அலையோசைக்கு நிகரான ராகமும் தாளமும் இதுவரை எந்த இசையமைப்பாளரும் போட்டதில்லை. களைப்பு போக கலை தேவையில்லை.

''என்னமோ ஆகிப்போச்சு ஐலசா'
என் கைவலியும் கூடிப்போச்சு ஐலசா'

மீனெல்லம் கரைசேர்த்தோம் ஐலசா'
நங்கலெல்லம் எப்ப கரை சேர ஐலசா..''

இப்படி பல பாட்டு வரும். தூக்கம் மறந்;து, துக்கம் மறந்து, தூரம் மறக்க இப்பாடல் நடுக்கடலில் துணையாய் நிற்கிறது.

நடுக்கடலில் நாங்க சந்திக்கிற பெரிய பிரச்சனைகள ஒன்னு கால நிலை மாற்றம் தான். எப்ப என்ன நடக்கும்னு தெரியாது. கடலுக்குள்ள இருக்கும் போது திடீரென மழைவரும், பேய் காற்று வீசும், புயல் வந்தால் பலத்த இடி இடிக்கும. நா பல தடவை வந்த கஷ்டத்த அனுபவச்சிருக்கேன். என் வாழ்க்கையில மறக்க முடியாத சம்பவம் ஒன்னு நடந்துச்சு, நானும் என நண்பர்களும் சேர்ந்து ஒரு தடவ கடலுக்கு போனோம், அப்போ திடீருனு பெரிய சத்தத்துடன் பெரிய இடி இடிச்சுச்சு, மழைவருவதற்கான அறிகுறி சற்றும் இல்லாம இடி. மேல மேகமும் இல்லை மின்னலுமில்லை இடிமட்டும் காதில் வந்து இறங்கியது. சின்ன வெள;ளை மேகங்கள் தான் அங்கே இருந்தது. திடீரென்று காற்று வீச ஆரம்பிச்சாது, அதிக அளவு காத்து அடிக்க ஆரம்பிச்சிடுச்சு, எங்கள் இதயங்கள் விட்டு விட்டு துடிக்க ஆரம்பிச்சது. அந்த இருட்டு நேரத்தில் கலங்காத கடல் கலங்கினால் எப்படி இருக்கும் அப்படி இருந்தது எங்கள் மனம். இருந்த மண்ணெண்ணைய் விளக்கும் அணைந்து விட ஒருவர் முகம் ஒருவர் பார்க்கமுடியாத வண்ணம் இருட்டு, ஒவ்வொருத்தரின் முகத்தில் உள்ள பீதி குரலில் தெரிந்தது.

திடீரென்று அடித்த பெரும் சுழல் காற்றில் எங்கள் படகு கவுந்திடுச்சு, நாங்க எல்லோரும் கடலுக்குலே விழுந்திட்டோம். தத்திதாவும் அலைகளில் தள்ளாடிக் கொண்டிருந்தது எங்கள் படகு. எங்களால யாருக்கும் தகவல் கொடுக்க முடியல. உயிர் பிழைத்து கரை சேருவோமா?! இல்லை கரை ஒதுங்குவோமா?! என்னு தெரியாத ஒரு நிலை. எங்க படகு தல குப்புற கிடந்தது, இத சரி செய்ய எவ்வளவோ முயற்சி செஞ்சே ாம் முடியல, வேற வழி இல்லாம படகோட பகுதிய புடுச்சிட்டு உயிர எப்படி காப்பாத்துரதுனு தெரியாம இருந்தோம். கடல் பிசாசு பற்றி எங்கள் தாத்தா கதை கதையா சொல்லுவாரு என் சின்ன வயசுல, அதெல்லாம் அப்போ வந்து வந்து போச்சு ஞாபகத்தில. அரசாங்கம் இப்பதான் வாக்கி டாக்கி மாதிரியான உபகரணங்கள் கொடுத்துருக்கு, அப்பவெல்லாம் யாராச்சும் வந்து காப்பாத்துனாதான் உண்டு. அந்த மாதிரி சு+ழ்நிலைல நாங்க இருந்தோம்.

அன்று இரவு முழுவதும் அரை நம்பிக்கையுடன், படகினை பிடித்தபடியே தொங்கிக்கொண்டிருந்தோம். எங்கேயாவது வெளிச்சம் தெரியுமா, ஒளிவருமா? என்று கண்களை கசக்கி கசக்கி பார்த்துக் கொண்டிருந்தோம். சுருங்கிக்கிடந்த சூரிய கதிர்கள் மேகக்கூட்டத்தில் மெல்ல எட்டி பார்த்தது. அந்த நேரத்துல எங்கள நோக்கி ஒரு மீன்பிடி படகு வந்தது. அவுங்களும் எங்கள மாதிரிதான் உயிலீ; தப்பிச்சு வந்தாங்க. நாங்கள் காத்துகிடந்த நம்பிக்கை கண்படும் தூரத்தில். நாங்க சு+ழ்நிலையை நெனச்சி கலங்கி போயிருந்தோம், நாங்கள் போட்ட ச த்தத்திலும், கடவுள் புண்ணியத்திலும் அந்த படகுக்காரணங்க எங்கள பாத்ததார்கள், அணைக்க வந்த அன்னை வாரி அணைத்துக்கொண்ட மாதிரி இருந்தது எங்களுக்கு. நாங்க எங்க படகையும், உயிரையும் கடத்துக்கிட்டோம். தூறும் மழை தூறிக்கொண்டே இருந்தது, காற்றும் மட்டும் மந்தமான குழந்தை போல் மெல்ல தவழ்ந்து வீசியது. கரையை அடைந்த போது தான் உயிரே திரும்பி வந்தது. கரையில் என் குடும்பத்தை காணும் போது மீண்டும் பிரவசவித்த தாய் போன்ற உணர்வினை கொண்டேன். கடலுக்கு போகும் போது நாங்கபடும் கஷ்டத்த நினைக்கும் போது இந்த தொழிலைப்பண்ணக் கூடாதுனு தோனுது. ஆனால் நம்ப குடும்பநிலை, என்னால இந்த தொழிலவிட்டு மாற முடியால. ஆனா என் பையனை இந்த தொழில் பண்ண வைக்க கூடாதுனு தான் என் மனசுல இருக்கு, அதே எண்ணம் தான் மகனுக்கும், அவன் மகன் அந்த தொழிலைப் பண்ணக்கூடாதுனு நினைக்குறான். அது தலைமுறை தலைமுறையா நடந்துக்கிட்டு தான் இருக்கு. கடலில் பிறந்த மீனுக்கு கடைசி வரை உப்பு தண்ணிதான் என்கிற மாதிரி, கடல்ல மீன் பிடுச்சி நாலு காசும் பாக்குறது நரகத்த பாக்குறதுக்கு சமம்ங்க.

# அழித்த கை அணைக்கும் என்ற நம்பிக்கையில்...

செல்வி. இரஞ்சிதா *

மனிதன் ஓரிடத்தில் தங்கி தனது வாழ்க்கையை வாழ ஆரம்பித்த நாள் முதல் அவனது பிரதானத் தொழில் விவசாயம் தான். காற்று, நீர், மண், வெப்பம், ஆகாயம் என இயற்கை சார்ந்தே மனிதனின் வாழ்க்கை இயங்கிக் கொண்டிருக்கிறது. அதனாலயே இயற்கை சார்ந்த அனைத்தையும் தெய்வமாக வணங்கும் வழக்கம் நமது பகுதிகளில் காலம் காலமாக இருந்து வருகிறது. இயற்கை எப்போதும் போல் இல்லாமல் திடீரென தனது வழக்கத்தை மாற்றி விஸ்பரூபம் எடுக்கும் போது, அது வாழும் உயிர் அனைத்திற்கும் பேரிடராக அமைந்து விடுகிறது. அப்படி ஏற்படும் பேரிடர்களால் எல்லா வகையான தொழில்களும் பாதிக்கபட்டாலும் அவற்றில் இருந்து எளிதில் மீழ முடியாத ஒரு தொழில் என்றால் அது விவசாயம் தான்.

விவசாயிகள் யாரும் பெரும் முதலாளிகள் அல்லர். ஒவ்வொரு போகத்திற்கும் தனது ஒட்டு மொத்த உழைப்பையும் பொருளாதாரத்தையும் முதலீடாக மண்ணுக்குள் போட்டு அறுவடைக்கு காத்திருக்கும் விவசாயிகளே தொண்ணூறு சதவிகத்தினரக்கும் மேல் உள்ளனர். கடந்த 2018ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சுமார் 140 கி.மீ வேகத்தில் வந்து ஒரே நாளில் ஐந்து மாவட்டங்களை உருமாற்றி போட்டுச் சென்று விட்டது ''கஜா'' எனும் புயல். புயலின் பாதிப்பில் இருந்து ஒவ்வொரும் மீண்டு வர ஒவ்வொரு கால அவகாசம் தேவைப்பட்டது. கடல் தண்ணீர் கலந்த பாசன நீர் நண்ணீராக மாற மற்றொரு பெரும்மழையை எதிர்பார்ப்பது விவசாயிகள் மட்டுமே. இதோ ஒரு விவசாயி கஜா புயல் தனக்கு ஏற்படுத்திய பாதிப்பை கூறுகிறார்.

வணக்கம் என் பெயர் கோவிந்தசாமி நான் நாகப்பட்டினம் மாவட்டம் விழுந்தமாவடி கிராமம் தென்பாதி கிழக்க இருக்கேன், நான் ஒரு விவசாயி, என் மனைவி பெயர் சந்திரா எங்களுக்கு மூனு பசங்க இரண்டு பொண்ணுங்களுக்கு கல்யாணம் ஆய்ட்டு பையன் வெளியூர்ல இருக்கான், எனக்கு விவசாயதான் எல்லாமே சீசன் தவறாம விவசாயம் பண்ணிட்டே இருப்பன். என்னால விவசாயம் பண்ணாம இருக்க முடியாது, ஆனா இப்ப விவசாயம் பன்றதுக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு. அதுக்கு முக்கிய காரணம் தண்ணிதான்.

முன்னாடியொல்லாம் எங்க பக்கத்துல தண்ணி நல்லா இருக்கும் ஆனா இப்ப ஒரே உப்புத்தண்ணியா இருக்கு இதுக்கு காரணம் கஜா புயல் வந்தது தான், புயல் வந்தப்போ கடல்தண்ணி ஃபுல்லா 1 கிலோ மீட்டருக்கு வந்துட்டு, அதனால தான் தண்ணி ஃபுல்லா உப்பா இருக்கு இந்த உப்பு தண்ணிய வச்சி என்ன பன்றது குடிக்க, சமைக்க, விவசாயம் பண்ணனு எதுவுமே முடியாது. வேற வழி இல்லாம குளிக்க யூஸ் பன்றோம், குடிக்க, சமைக்க, நல்ல தண்ணி வேணுனா 3 கிலோ மீட்டர் போய்தான் எடுத்துட்டு வந்துதான் பயன்படுத்தனும்.

நான் சீசன் தவறாமா விவசாயம் பன்றவன், நிறைய காய்கறிகள் பதியம் போடுவன். என்னென்ன காய்கறிகள்னா கத்தரிக்காய், வெண்டைக்காய், பவக்காய், புடலங்காய், வெள;ளரிக்காய்,

* செல்வி. இரஞ்சிதா, தலைஞாயிறு

கொம்புட்டிக்காய், இது மாதிரி பல காய்கறிகள் நா பயிர் செய்வன், ஆன இப்ப கத்தரிக்கா மட்டுதான் போட்டுறுக்கன் ஏனா தண்ணிதான் பெரும் பிரச்சனையா இருக்கு, உப்பு தண்ணில எந்த செடியும் வரமாட்டுது, கத்தரி செடி மட்டும் ஓரளவு வருது அதிலயும் செடிக்கு மேல தண்ணி ஊத்துனா செடி அப்படியே கருகி போய்டுது அதனால  செடிக்கு அடியில தண்ணி ஊத்தனும் அப்படி ஊத்துனா செடி ஓரளவுக்கு வந்தாளும் காய்க்க மாட்டுது அப்படியே காய் வந்துச்சுனா சின்னதாவே இருக்கு காய் பெருக்காம சின்னதாவே இருந்து வெம்பி கிழ உளுந்துடுது.

இதப்பத்தி நெனச்சாலே எனக்கு விவசாயம் பன்றதுக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு. நா சாகுபடி பண்ணிட்டே இருந்ததால சாகுபடி பண்ணாம இருக்க முடியல, அதனாலதான் இப்ப சாகுபடி பண்ணிருக்கேன், பண்ணியும் ஒரு புரோயஜனமும் இல்ல காசுதான் செலவு இதுவரைக்கும் 10,000 நஷ்டம் வந்துட்டு இன்னும் உரத்துக்கான செலவு இருக்கு அதுவும் எங்களுக்கு நஷ்டதான்.

இந்த சாகுபடி வச்சி தான் என் குடும்பம் இருக்கு, கஜாபுயலுக்கு முன்னாடி நல்ல தண்ணி இருந்தபோ விளைச்சல் அதிகமா இருக்கும் எப்படியும் எட்டு நாளைக்கு ஒரு தடவ காய்கறி பறிச்சு சந்தைக்கு கொண்டு போவன் நல்ல வருமானம் இருக்கும் எப்படியும் 10.000 கிட்ட லாபம் இருக்கும் அத வச்சி தான் என் பொண்ணுங்கள கல்யாணம் பண்ணி கொடுத்தேன், நல்லா கறி புளினு வாங்கி சாப்டுவோம், ஆன கஜா புயலுக்கு அப்பறம் மொத்தமா மாறிட்டு விளச்சல் நல்லா இல்ல முன்னாடி எட்டு நாளைக்கு ஒரு வாட்டி காய் பறிப்போம், இப்ப ஒரு மாசம் ஆனாலும் ஒரு மூட்ட அளவுக்குகூட  காய் இல்ல இதனால வருமாணமும் இல்ல சாப்பாடுக்கும் கொஞ்சம் கஷ்டமா இருக்கு.

முன்னாடி நான் எப்படியும் 200 ஏக்கர் சாகுபடி பண்ணுவன் எல்லாம் நல்லாயிருக்கும் இப்ப 20 குழி கூட சாகுபடி பன்றதுக்கு கஷ்டமா இருக்கு எல்லாத்துக்கு காரணம் உப்பு தண்ணிதான்.



நல்லதண்ணி இருந்தப்போ மோட்டர் எந்த பிரச்சனையும் இல்லாம நல்லா தண்ணி எவ்வளவு நேரமானாலும் எறச்சது, கஜாபுயலுக்கு அப்பறம் மோட்டற இதுவரைக்கு அஞ்சாறு தடவ ரிப்பேர் பண்ணிட்டன், ஏனா உப்புத்தண்ணியா இருக்குறதுனால அடிக்கடி ரிப்பேர் ஆகுது. எப்படியும் மோட்டற ரிப்பேர் பன்றதுக்கு ஒரு தடவைக்கி 600ல இருந்து 800 ரூபாய் செலவு ஆகுது, வருமானமே இல்லாம செலவு செய்றது தான் அதிகமா இருக்கு.

கடல ஒட்டி இருக்குறதால தண்ணி பிரச்சண அதிகமாவே இருக்கு, இந்த உப்பு தண்ணி நல்ல தண்ணியா மாறனுனா நல்லா மழைப் பெய்யனும் ஒரு வேல மழை நல்லா பெய்ஞ்சதுனா உப்பு தண்ணி நல்ல தண்ணியா மாறிடும். ஏன் நா இப்படி சொல்றனா, 2004 ல சுனாமி வந்தப்பவும் இந்த தண்ணி பிரச்சண இருந்தது, அப்பறம் நல்லா மழை பெய்ஞ்சதுனால உப்பு தண்ணி மாறிட்டு அதே மாதிரி இப்பவும் மழை பெய்தால் தண்ணி மாறிடும் அதான்.

முன்னாடியொல்லம் மேற்க்க உள்ள மக்கள் இங்க வந்து தண்ணி எடுத்துக்கிட்டு போவாங்க ஆன இப்ப நாங்க மேற்க்கபோய் தண்ணி எடுத்துக்கிட்டு வர்றோம். இந்த நெலம மாறனுனா நல்ல மழை பெய்யனும் அப்போதான் விவசாயம் நல்லா இருக்கும், கடல ஒட்டியுள்ள விவசாயிகளுக்கு பெறும் பிரச்சனையா உப்பு தண்ணி இருக்கு இந்த நெலம மாறனும் அதுக்கு நல்ல மழை பெய்யனும் விவச ாயம் செழிக்கனும் என்கிறார் கோவிந்தசாமி.

அடிக்கும் அன்னையின் கால்களையே கட்டி அழும் குழந்தை போல இயற்கை செய்த பாதிப்பை இயற்கையால் தான் சரி செய்ய முடியும் நம்பும் விவசாய பெருமக்களுக்கு எல்லாம் வல்ல இயற்கை துணையாய் நிற்கட்டும்.



# அடுத்த தலைமுறையை எனது தொழிலுக்கு விடமாட்டேன்...

திருமதி.துர்காதேவி *

பெரும்பாலும் கடற்புறம் பற்றி பேசினால் எழுதினால் மீனவர் சமுதாயம் பற்றி குறிப்பாக மீன் பிடிக்குத் தொழிலில் ஈடுபடும் ஆண் மீனவர்கள் சுற்றியே இருக்கும். மீனவ சமுதாய பெண்களின் வாழ்க்கை முறையை வாழ்வாதாரத்தை பற்றி எழுத தவறுகிறோம். அதனாலேயே இந்த கட்டுரை ஓர் மீனவ பெண் தனது வாழ்வாதாரம் பற்றியும், தனது வாழ்க்கை பிரச்சனைகளை பற்றியும்; பகிரும் கட்டுரையாக இந்த கட்டுரை உள்ளது.

விழுந்தமாவடி வடக்கு மீனவர் காலனியில் வசிக்கும் திருமதி. சரோஜா தன் அனுபவங்களை என்னுடன் பகிர்ந்து கொணடார். இவர் கணவர், போதை பழக்கத்திற்கு அடிமையானவர். இவர் வேலைக்கு செல்லும் நாட்கள் மிகவும் அரிது. தினமும் பகலிலேயே குடித்துவிட்டு வீட்டில் மனைவியுடன் சண்டை போடும் நிலையிலேயே இருக்கிறார். இவர்களுக்கு ஒரு பெண் குழந்தை உண்டு. சரோஜாவுக்கு கணவரால் எந்த உதவியும் இல்லை, அவர் தினமும் தாமாகவே அதிகாலை 3 மணிக்கு தனது கிராமத்திலிருந்து சுமார் 20 கி.மீ தொலைவில் இருக்கும் மாவட்ட தலைநகர் நாகப்பட்டிணத்திற்கு சென்று மீன் வாங்கி வந்து ஊர் ஊராக விற்பனை செய்கிறார். 1000 ரூபாய்க்கு மீன் எடுத்தால் அதில் ரூ. 200/- ரூ.300/- வரை லாபம் கிடைக்கும். சில நேரங்களில்; முழுமையாக மீன் விற்பது கிடையாது, அச்சமயம் மீதம் உள்ள மீனை எடுத்து வந்து கருவாடு போடுவார். தினமும் தனது கிராமத்திலிருந்து விழுந்தமாவடி கிராமம் வரை சுமார் 6 கி.மீ வரை ஒரு நாளைக்கு நடந்து சென்று மீன்களை விற்பனை செய்து வருகிறார். இத்தொழில் வருமானத்தை கொடுப்பதுடன் வியாதியையும் கொடுக்கிறது.

ஒரு நாள் அவர் அலைந்து திரிந்ததில், அவருக்கு உடல்நிலை சரியில்லாமல் போய்விட்டது.



சாப்பிடாமல் போய் விட்டார், போகும் வழியில் மயக்கம் அடைந்துவிட்டார். மழை வெயில் என்று பாராமல் அவர் கஷ்டபட்டு தனது தொழிலை செய்து வருகிறார். அவரது குடும்ப வறுமை - உடல் ரீதியாகவும், கணவர் குடிபழக்கத்தால் மனரீதியாகவும் பாதிக்கபட்டிருக்கிறார். இவ்வளவு கஷ்டத்திலும் தன் மகளை காலேஜ் வரை படிக்க வைத்து திருமணமும் செய்ய ஏற்பாடு செய்து வருகிறார். சரோஜா குடும்பத்தில் அவர் பாட்டி மீன்விற்றிருக்கின்றார். தற்போது, இவர் மீன் விற்கிறார். ஆனால் தன் மகளை கஷ்டபடுத்தாது, அவரை படிக்க வைத்து நல்ல வேலைக்கு அனுப்பி இருக்கிறார். சரோஜா கஷ்டபட்டாலும், அடுத்த தலைமுறையை தனது தொழிலுக்கு விடமாட்டேன்.. என்ற வைராக்யத்துடன் இருக்கிறார். ஒரு விவசாயி தனது அடுத்த தலைமுறையை விவசாயத்திற்கு ஈடுபடுத்த விரும்பவில்லை என்று நாம் மேடைக்கு மேடை தொலைகாட்சியிலும், திரைப்படங்களிலும் பேசி கைதட்டு வாங்குகிறோம், ஆனால் சரோஜா போன்ற மீனவ சமுதாய மீன்வற்று பிழைக்கும் பெண்கள், தனது அடுத்த தலைமுறையை தனது தொழில் ஈடுபடுத்த மாட்டேன் என்பதை நமது சமுதாயம் கைதட்டி வரவேற்குமா?...

* திருமதி.துர்காதேவி, வேட்டைகாரனிருப்பு

# பாரதி உனது கனவு மெய்படுமா?

செல்வி. துர்கா

வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம் என்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார் என்று பாரதி பறையரைந்து நூறு ஆண்டுகள் ஆனாலும், இன்றும் பெண்ணடிமைத் தனம் என்பது நடக்கத்தான் செய்கிறது. பெண்கள் அதிகம் படிக்கக் கூடாது, அப்படி படித்து விட்டால் அதற்கு ஏற்றார் போல் படித்த மாப்பிள்ளையை தேட வேண்டும். ஏனென்றால் தன்னைவிட அதிகம் படித்த பெண்களை திருமணம் செய்ய ஆண்பிள்ளைகள் தயாராக இல்லை என்பதே நிதர்சனமான உண்மை. அப்படி அதிகம் படித்த மாப்பிள்ளை கிடைத்தாலும் அதற்கேற்ற வரதட்சனை, சீர்வரிசை என செலவுகள் அதிகமாகும் என்பது பெற்றோரின் எண்ணம். இப்படி சில காரணங்களால் பெண்பிள்ளைகளை அதிகம் படிக்க வைக்க யோசிக்கின்றனர் பெற்றோர்கள்.

அதிலும் வேலைக்குச் செல்லும் பெண்களின் நிலை இன்னும் மோசம். பிறந்த வீட்டில் இருக்கும் வரை பெண் என்பவள் ஒவ்வொரு தகப்பனுக்கும் இளவரசி தான். தான் நினைக்கும் காரியங்களை எளிதாக சாதிக்க முடியும். திருமணம் என்று முடிவாகியவுடன் அவர்கள் ஒரு நூல்பாவையாக மாறிவிடுகின்றனர். அந்த நூல் சில குடும்பங்களில் கணவர் கையில் இருக்கும், சில குடும்பங்களில் மாமனார் மாமியார் கையில் இருக்கும். அவர்கள் ஆட்டுவிக்கும் வண்ணம் இவர்கள் ஆட வேண்டும் என்று நினைக்கின்றனர். ஒரு வேளை சுயமாக ஆட முடிவெடுத்தால் கணவரின் குடும்பத்தையும் அந்த பெண்ணையும் இணைக்கும் அந்த நூல் அறுந்து விடுகிறுது. இங்கே தன் முன்மாதிரியாக தன் தோழியின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் மூலம் பாரதியின் கனவு இன்னும் முழுமையாக மெய்படவில்லை என்கிறார் துர்கா

என் பெயர் துர்கா, என்னுடைய உறவினர் வீட்டு பொண்ணு உஷா. நானும் அவளும் ரொம்ப நல்ல தோழிகள், எனக்கும் அவளுக்கும் 5 வயசு வித்தியாசம். ஆனாலும் அவ என்னோட ஜாலியா விளையாடுவா. பள்ளிப் படிப்பை முடிச்சுட்டு காலேஜ் போனாள். தினமும் என்கிட்ட வந்து காலேஜ்ல நடந்த எல்லாத்தையும் அப்படியே சொல்வா. படிச்சிட்டு வேலைக்கு போய் சொந்த கால்ல நிக்கனும்னு அடிக்கடி சொல்லுவா. அவ சொல்லும் போதெல்லாம் எனக்கும் ஆசையா இருக்கும் நானும் படிக்கனும்னு.

* செல்வி. துர்கா

எங்க கிராமத்திலே அவதான் முதல் பெண் இன்ஜினியர் அவ நெனச்ச மாதிரியே படிச்சி முடிச்சிட்டு வேலைக்கு போய்ட்டா. நான் அப்போ பள்ளியிலதான் படிச்சிட்டு இருந்தேன். எனக்கு நிறைய சாப்பிடுற பொருள், டிரஸ் எல்லாம் வாங்கிட்டு வருவா. எனக்கு நிறைய அட்வைஸ் பண்ணுவா. எத செய்யனும் எத செய்யக்கூடாது எப்படி படிக்கனும்னு நிறைய சொல்வா. எனக்கும் அவள பார்க்கும் போதெல்லாம் ஆச அதிகமாய்ட்டே போனது. நானும் ஸ்கூல் முடிச்சிட்டு அப்பாகிட்ட இஞ்சினியரிங் சேர்த்துவிட சொன்னேன்.

அப்பாவும் காலேஜ்ல சேர்த்து விட்டாங்க. அப்போ நான் கடவுள்கிட்ட நான் நாலுவருஷம் நல்லா படிச்சி உஷா மாதிரி வேலைக்கு போகனும் வேண்டிகிட்டேன். எனக்கு என்ன சந்தேகம்னாலும் அவ கிட்டதான் கேட்பேன். எல்லாத்தையும் நல்லா சொல்லி குடுப்பா. நான் இரண்டாவது வருஷம் படிக்கும் போது அவளுக்கு வீட்ல மாப்ள பாத்தாங்க. ஆனா அவ அதுக்கு ஒத்துக்கவே இல்ல. வேணாம் வேணாம்னு சொன்னா ஆனா அந்த வருஷத்துக்குள்ளேயே அவளுக்கு கல்யாணம் பண்ணிட்டாங்க.

அப்புறம் அவளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்துச்சு. அப்போ நான் மூன்றாவது வருஷம் படிச்சிட்டு இருந்தேன். குழந்தைக்கு ஒரு வயசு ஆனாதும் அவ வேலைக்கு மறுபடியும் போகனும்னு சொன்னா. அதுக்கு அவ கணவர் ஒத்துக்கவே இல்ல. அவளும் முடிவ மாத்திகிறதா இல்ல. அதனால இரண்டு பேருக்கும் சண்ட வந்து விவாகத்து ஆயிடுச்சி. அத கேட்டதும் எனக்கு ரொம்ப கஷ்டமா இருந்துச்சு. எவ்வளவு ஆசைகளோடையும், கனவுகளோடையும் இருந்த உஷா வாழ்க்கை இப்படி ஆயிடுச்சு ரொம்ப வருத்தமா இருந்துச்சு. இப்போ அவ அவளோட குழந்தையோட வேலை பாத்துட்டுதான் இருக்கா.

நான் என்னோட காலேஜ் படிப்ப முடிச்சிட்டு வேலைக்கு போகனும்னு நெனைக்கும்போது எங்க வீட்ல எனக்கு எதிர்ப்பு வந்தது. வேலைக்கு போனீன்னா இன்னைக்கு உஷாக்கு வந்த நிலமைதான் நாளைக்கி உனக்கு வரம்னு சொல்லி தடுத்துட்டாங்க. நான் எவ்வளவோ கேட்டு பாத்தேன். ஆனா அவங்க ஒத்துக்கவே இல்ல. இப்போ ஊர்லயே ஒரு வேல பாத்துட்டு இருக்கேன் என்கிறார் துர்கா.

இதுல வேலைக்கிதான் போவேன்னு சொன்ன உஷா மேல தப்பா?, இல்ல வேலைக்கே போக கூடாதுனு சொன்ன அவங்க கணவர் மேல தப்பா?. யார் மேல தப்புனு எனக்கு தெரியல. ஆணும் பெண்ணும் சமம் என்று சொல்லும் சமுதாயம் ஏன் திருமணத்திற்கு பிறகு பெண்களை வேலைக்கு அனுமதிப்பதில்லை? என்று பல கேள்விகளையும் நம் முன் வைக்கிறார் துர்கா. பதில்?



# எங்க ஊரு

பிரியங்கா

திருவிழாக்களை விரும்பாதவர்கள் இவ்வுலகில் உண்டா? இந்தியாவும், தமிழ்நாடும் திருவிழாக்களுக்கு பெயர் பெற்றவை. திருவிழாக்கள் நமது பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை பிரதிபலிக்கின்றன. திருவிழாக்களும், சடங்குகளும், ஊருக்கு ஊர் வேறுபடுகின்றன. எங்க ஊரு திருவாரூர் மாவட்டம், திருவாதிரை மங்கலம் வடகுடி கிராமம், இந்த கிராமத்தில் அழகு மாரியம்மன் கோவில் உள்ளது. இந்த கோவிலில் 5 நாள் திருவிழா நடக்கும். 5 நாளும் ஊரில் உள்ளவர்கள் யாரும் வெளியூர் போகக்கூடாது. அதேபோல் வெளியூரில் உள்ளவர்கள் யாரும் வரக்கூடாது. காரணம் கோவில் திருவிழாவுக்கு காப்பு கட்டுவாங்க. கரகம் எடுக்க 15 நாள் விரதம் இருப்பாங்க.

முதல் நாள் திருவழா மாலை 5 மணிக்கு கரகத்துடன் ஆரம்பமாகும்.; கரகம் எடுத்துட்டு காலில் சலங்கை கட்டிகிட்டு வருவாங்க. ஒவ்வொரு விட்டிற்கும் போவார், இவர் பின்னால் எட்டு பேர் போவாங்க, ஒவ்வொரு வீட்டிலும் அவர் காலில் தண்ணி ஊற்றி ஆசிர்வாதம் வாங்குவாங்க. இது போல் எல்லோர் வீட்டிலும் நடக்கும். இது முடிய இரவு 9 மணியாகும்.

இரண்டாம் நாள் - அம்மன் வீதி உலா, இது இரவு 9 மணிக்குதான் ஆரம்பமாகும். அம்மன் வீதி உலா கிளம்பும்போது ஆட்டம், பாட்டம், வானவேடிக்கை எல்லாம் நடக்கும். அம்மன் வீதி உலா வரும் போது அவ்வளவு அழகா இருக்கும். பூவாலே அலங்கரித்து இருப்பாங்க, அதை சுற்றி வண்ண வண்ண விளக்கு எல்லாம் இருக்கும் பார்க்கும் போது அவ்வளவு அழகா இருக்கும் எல்லா வீட்டிலும் அர்ச்சனை பண்ணுவாங்க. சாமி வர எவ்வளவு நேரமானலும் அர்ச்சனை பண்ணும் வீட்டு பெண்கள் தூங்க கூடாது, தூங்கிவிட்டு அர்ச்சனை பண்ணக்கூடாது என்பது ஒரு சம்பிரதாயம் இருக்கு. எத்தனை மணியாக இருந்தாலும் தூங்காம விழிந்திருந்து அர்ச்சனை செய்வாங்க. பூ, பழம், பத்தி, மாலை, பட்டு எல்லாம் வச்சு, தேங்காய் முழுவதும் மஞ்சள் பூசி அதில் குங்குமம் வைத்து அர்ச்சனை செய்யவாங்க. ஒவ்வொரு வீட்டில் உள்ள அர்ச்சனை தட்டு பார்க்கும் போது அழகாகவும், நல்ல நிறம் முழுவதுமாகவு ம் தெரியும். சாமி கோவிலில் போய் இறங்க விடியக்காலை 4 மணியாகும்.

★பிரியங்கா, திருவாருர்



# திருவிழா!

மூன்றாம் நான் திருவிழாவில் கப்பரை சட்டியை கையில் தூக்கி வருவார், காலை 7 மணிக்கு ஆரம்பமாகும். இது போன்ற காட்சியை நான் படத்தில் தான் பார்த்து இருக்கிறேன். பாகுபலி படத்தில் ரம்யாகிருஷ்ணன் தலையில் துக்கி வருவாங்க. கப்பரை எடுக்குறவங்க 15 நாள் விரதம் யார் எடுக்குறாங்களோ அவங்க வம்சாவலி தான் 5 வருடம் எடுக்கும், 5 வருடத்திற்கு ஒரு முறை மாறும். அதே போல் எங்க ஊரில் மூன்றாம் நாள் திருவிழாவில் கப்பரை சட்டி தூக்குபவர், கையில் நெருப்பு சட்டி காலில் சலங்கை, உடம்பு நிறைய எண்ணெய், குறுக்கே மாலை இதல்லாம் அணிந்து நடனம் ஆடிக்கொண்டு வருவார். வடகுடியில் 1000 வீடுகள் உள்ளது. ஒவ்வொரு வீட்டிற்கும் போவார். ஒவ்வொரு வீட்டிலும் ஒரு டம்பளர் எண்ணெய் கொஞ்சமும் குளிர் பானம் கொஞ்சமும் குடுப்பாங்க. இதுக்கு முன்னாடி கப்பர சட்டி எடுக்குரவங்களுக்கு இளநீர் குடிப்பாங்க, ஆனால் இப்ப எல்லோர் வீட்டிலும் குளிர்பானம் தராங்க. அவங்க கொடுக்குற எண்ணெய் அந்த கப்பர சட்டியில் வாங்கி ஊத்துவார். அதன் பிறகு அவர்கள் வீட்டு வாசலில் கொஞ்ச நேரம் சாமியாடுவார். இது முடிய மணி 7 ஆகும். முடியும் போது கோயிலை மூன்று முறை சுற்றி வருவார். தென்னங்குருத்து வச்சி சாமியாடுவார் அதை பிரித்து எல்லோரும் கொடுப்பார். அதை எல்லோரும் வீட்டிலும் சாமி மடத்தில் வைப்பாங்க.

நான்காம் நாள் திருவிழாவில், மஞ்சள் விளையாட்டு 5 நாள் திருவிழாவில் எனக்கு பிடித்தது இந்த மஞ்சள் விளையாட்டுதான். எல்லோரின் மீதும் மஞ்ச தண்ணி ஊத்தி ரொம்ப சந்தோசமாக விளையாடுவோம்.

ஐந்தாம் நாள் திருவிழா - தீ மிதித்தல்- சாமிக்கு வேண்டுதல் வைத்து இருப்பாங்க. தீ மிதிக்கும் போது கையில் வேப்பிலை வச்சி கிட்டு அப்படியே நெருப்பில் ஓடுவாங்க. இது போல எங்க ஊரில் ஐந்து நாள் திருவிழா நடக்கும் ஆனி மற்றும் ஆடில திருவிழா நடக்கும். இந்த திருவிழா பாக்குறதுக்கு எல்லாரின் உறவினர்களும் வருவாங்க. காப்பு கட்டுனாவரமுடியாதுனு, காப்பு கட்டுரத்துக்கு முன்னடியே எல்லோர் வீட்டிக்கும் உறவினர்கள் வந்துடுவாங்க. இந்த 5 நாள் திருவிழாவும் ரொம்ப சந்தோசமா



இ ரு க் கு ம் .
ம று ப டி ய ம்
எப்பவரும் என யோசி
க்கும் அளவுக்கு நடக்கும்.
என்னுடைய சின்ன வயதில் இந்த
கோவில் திருவிழா பற்றி எதுவும் தெரியாது.
ஆனால் நான் பயப்படுவேன் இந்த கப்பரை சட்டி
எடுத்துட்டு வராங்கலே அவங்கல பார்த்தா எனக்கு பயமாக இருக்கும்.

எனக்கு 10 வயதுக்கு மேலதான் இந்த கோவில் திருவிழா பற்றி தெரியும். எனக்கு 11 வயது இருக்கும் போது இது போல எங்க ஊர்கோவில் திருவிழா வந்தது. அப்போது நான் ஏழாம் வகுப்பு படித்தேன். நான் பள்ளி போயிட்டு வீட்டுக்கு வந்தேன். அம்மா வீட்டுக்குள்ள போகாதேனு சொன்னாங்க. நான் ஏன்னு கேட்டேன். கோயில காப்பு கட்டிட்டாங்க அதனால் சுத்தமா இருக்கனும் வெளில எங்கயாவது போனா குளிச்சிட்டுதான் வரனும் என்று சொன்னாங்க, நான் ஏம்மா இப்படினு கேட்டேன். அப்போது எங்க அம்மா எங்க ஊர் கோவில் அழகு மாரியம்மன் பற்றி சொன்னாங்க. 45 நாள் திருவிழா நடக்கும் எல்லோரும் சுத்தமா இருக்கனும் என்று சொன்னாங்க. இந்த 5 நாள் திருவிழா எப்படி இருக்கும், ஒவ்வொரு நாளும் எப்படி இருக்கும் என்று சொன்னாங்க. அதை கேட்டதும் அடுத்த திருவிழா எப்ப வரும்னு எங்க அம்மாகிட்ட தினமும் கேட்பேன். ஒரு நாள் ஆனி மாதம் வந்தது. எங்க அம்மா என்கிட்ட நீ தினமும் கேட்பாய் அல்லவா, கோவில் திருவிழா எப்பவரும்னு நாளையில் இருந்து நம் ஊர்ல கோவில் திருவிழா ஆரம்பமாகுதுனு சொன்னாங்க. (அதனால் நான் ஒருவாரம் ஸ்கூலுக்கு போகல)

எனக்கு ரொம்ப சந்தோசமா இருந்தது என்னுடைய சின்ன வயதில் பயந்து, பயந்து பார்த்தேன், ஆனால் இப்ப நான் கொஞ்சம் கூட பயப்படவில்லை. அந்த சாமியை பார்க்கும் போது பயம் வரல பக்திதான் வந்தது. காரணம் அம்மா அந்த கோயிலைப்பற்றியும், சாமியைப்பற்றியும் சொன்னாங்க அதனால பயம் தெரியல. அதுமட்டும் இல்ல, நான் சின்ன வயதில் பார்த்தபோது சாமி வரும் போது வண்ண விளக்குகள் எல்லாம் இருக்காது வெடி, ஆட்டம், எதுவும் இருக்காது. கோவில் திருவிழா வரும் போது புது துணியை உடுத்திட்டு போய்தான் சாமி கும்பிடுவோம், ரொம்ப சந்தோசமா இருக்கும். மறுபடியும் எப்ப வரும் என யோசிக்கும் அளவுக்கு நடக்கும் எங்க ஊர் திருவிழா.

# சமூகத்தின் வளர்ச்சியில் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தின் பங்கு

கவியரசன் *

வணக்கம். அன்பான வாசகர்களே, இக்காலகட்டத்தில் ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கு தொழில்நுட்பங்கள் எத்தகைய பங்காற்றுகிறது என்பதனை பற்றிய தகவல்களை எனது பணியின் மூலம் கிடைத்த அனுபவத்தினை கொண்டு உங்களுக்கு எழுத்துகளாய் தருகிறேன்.

எனக்கு சொந்த ஊர் புதுப்பள்ளி கிராமம். இது நாகை மாவட்டம், கீழ்வேளூர் தாலுக்காவில் உள்ளது. நான் டிப்ளமோ கம்யூட்டர் சைன்ஸ் இன்ஜினியரிங் படித்துள்ளேன், இதன் மூலம் ஓரளவு கணிணி சார்ந்த அறிவு கிடைத்தது. நான் ஆண்ட்ராய்டு மென்பொருளுக்கான அப்ளிகேஷன் உருவாக்கும் நிறுவனத்தில் இரண்டரை ஆண்டு காலம் பணி அனுபவம் பெற்றுள்ளேன்.




* கவியரசன், புதுப்பள்ளி

எனக்கு கடந்த 2018 ம் ஆண்டு ஜீன் மாதத்தில்; தொண்டு நிறுவனத்தின் மூலம் கிராம அளவில் ஓர் மக்கள் வள மையத்தை கணிணி துணையுடன் நிறுவி அதில் பணி வாய்ப்பு சொந்த ஊரிலே கிடைத்தது. 01.08.2018 அன்று திறப்பு விழா நடைபெற்று, அதன் பின் மக்கள் வள மையம் செயல்பட துவங்கியது. இம்மையத்தில் கணிப்பொறிகள், பிரிண்டர்கள் மற்றும் இணைய வசதி அளிக்கும் அனைத்து  உபகரணங்களும் உள்ளன. கிராமத்திலே மையம் இருப்பதால் மக்களின்  அலைச்சல் குறைக்கப்படுவதோடு நேரமும் விரையமாவது தடுக்கப்படுகிறது. இம்மையத்தில் மூலம் கிராமப்புறங்களில் இணைய வசதி நிறுவப்பட்டுள்ளது, இணையத்தின் வழியே அரசு திட்டங்களுக்கு விண்ணப்பிக்கப்பட்டு அரசு சலுகைகள் பெற்றுதரப்படுகின்றன, ஆவணங்கள் தயாரிப்பு, நகல் எடுத்தல், இணையத்தின் வழியே பள்ளி கல்வி, இணையத்தின வழியே பணபறிமாற்றம் போன்ற பல சேவைகள் அளிக்கப்படுகின்றன. இணையத்தின் வழியே வீடியோ கான்பிரன்ஸ் மூலம் கிராமப்புற மக்கள் மிக எளிதாக அரசு அதிகாரிகளை, தொழில்நுட்ப வல்லுனர்களை தொடர்பு கொள்கின்றனர். அதுமட்டும் இல்லாமல், இம்மையங்கள் கடற்புற மக்களின் குறிப்பாக பெண்களின் வாழ்வாதாரத்தில் மிகப்பெரிய மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன. இம்மையங்களில் கணிணி துறையில் பட்டயம் மற்றும் குறைந்த கால சான்றிதழ் கல்விகள்; தரமான முறையில் குறைந்த செலவில் கிடைக்கின்றன. இங்கு நிறைய மாணவ, மாணவிகள் மற்றும் இல்லத்தரசிகள் கணிணி கல்வி பயிற்சி பெற்று வருகின்றனர்.

எங்களது மக்கள் வள மையத்தில்; கல்வி பயின்ற இரண்டு இல்லத்தரசிகளான திருமதி.கோகிலா மற்றும் திருமதி. சிவசுந்தரி ஆகியோருக்கு தனியார் நிறுவனத்தில் கணிணி சார்ந்த வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. அவர்கள் மிக்க மகிழ்ச்சி அடைந்துள்ளனர், ஒரு காலகட்டத்தில் வெளியில் செ ன்று கணிணி கல்வி கற்கும் அளவிற்கு வாய்ப்பு இல்லாமல் இருந்தார்கள். தனியார் கணிணி மையங்களில் கணிணி பயிற்சிக்கு கட்டணம் கூடுதலாக வசூலிக்கப்படுகிறது. அவர்களது குடும்ப சூழ்நிலை, அவர்களை அதிகம் செலவு செய்து படிக்கும் வாய்ப்பை இழக்க செய்தது, ஆகையால் அவர்கள் உள்ளூரிலேயே செயல்படும் எங்களது மக்கள் பயிற்சிக்கு வந்தார்கள். இங்கு 6 மாத காலம் கணிணி பயிற்சி பெற்றார்கள். தற்போது ஓர் தனியார் நிறுவனத்தில் பணி செய்யும் வாய்ப்பை பெற்றனர், அது அவர்களது வருமானத்தை ஈட்டி குடும்ப பாரத்தை பகிரந்து கொள்ள செய்ய உறுதுணையாக இருக்கிறது.

எங்களது கிராம மக்கள் எங்களது மக்கள் வள மையமானது அருகாமையில் இருப்பது பயனுள்ளதாக இருப்பதாக கருதுகிறார்கள். ஆன்லைன் சர்வீசில் கணிணி பட்டா, மின் கட்டணம், தேர்வு முடிவுகள் போட்டி தேர்வுகளுக்கு விண்ணப்பித்தல் பான்கார்டு விண்ணப்பம் செய்தல் போன்ற சேவைகளை சிறப்பாக செய்து வருவதால் மக்கள் பயனடைந்து வருகின்றனர். மற்ற கணிணி மையத்தை விட இங்கு சற்று குறைவாகவே பயன்பாடுகளுக்கு மிகக்குறைந்த கட்டணமே பெறப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

கிராமங்களில்  என்னை ஓர் வழிகாட்டியாக பார்க்கின்றனர், எங்களது மக்கள் வள மையத்தை தொழில்நுட்பத்தின் பயனை கிராமங்களுக்கு, குறிப்பாக கிராம ஏழைகளுக்கு கொண்டு செல்லும் ஊடகமாக பார்க்கின்றனர்



## தானம் அறக்கட்டளை

தானம் அறக்கட்டளை வறுமையை அகற்ற மக்கள் இயக்கங்களை உருவாக்கி, அவற்றை ஜனநாயக அடிப்படையில் செயல்பட வைக்கும் ஒரு நிறுவனமாகும். இந்நிறுவனம் 1997 அக்டோபர் 2 முதல் செயலாற்றி வருகிறது. ஆர்வமுள்ள படித்த இளைஞர்களை ஏழை மக்களின் வளர்ச்சித் திட்டங்களில் பணியாற்றச் செய்வதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படச் செய்வதே தானம் அறக்கட்டளையின் முக்கிய நோக்கமாகும்.

மக்கள் நிறுவனங்களை உருவாக்கி அவற்றின் மூலம் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் மூலம் ஏழ்மையை அகற்றும் நோக்கில் களஞ்சியம், வயலகம், மானாவாரி விவசாயம், தகவலகம், கடற்புற வாழ்வாதாரம், பஞ்சாயத்து போன்ற அமைப்புகளின் வாயிலாக பல்வேறு வளர்ச்சிப் பணிகளை செய்துவருகிறது. கடந்த பதினெட்டு ஆண்டுகளுக்கும் மேலாக அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுடன் இணைந்து 14 மாநிலங்களில் 17 இலட்சம் மக்களுடன் மேம்பாட்டுப் பணிகளை முன்னெடுத்து வருகிறது.

## DHAN Foundation

DHAN Foundation is a development Organization working towards significant changes in the lives of the poor through innovative themes. It has been promoted with the objective of bringing highly motivated and educated young women and men to the development sector to work with the poor at grassroots. DHAN Foundation has come out with two scalable models Kalanjiam model of Micro Finance and Vayalagam model of Tank based watershed development. It is working on developing models on other programmes viz Tata Dhan Academy, Rainfed, Panchayat, ICT for poor. The new themes on Climate Change and Adaptation, Migration and Development, Youth and Development are on piloting in evolving models. The centres of DHAN Foundation play a vital role in integrating different programmes and themes across, in nurturing and processing the culture of collegiality, mutuality and solidarity.

மேலும் தொடர்புக்கு

**தானம் அறக்கட்டளை**
1ஏ, வைத்தியநாதபுரம் கிழக்கு, கென்னட் குறுக்குத் தெரு
மதுரை 625 016. தமிழ்நாடு
தொலைபேசி: +91 452 2302500, தொலைநகல்: +91 452 2602247
மின்னஞ்சல்: dhanfoundation@dhan.org, இணையதளம்: www.dhan.org